# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, PONNERI

**Case No. : D. V. C. No. 6/2024**

**Petitioner Side Witness : P. W. 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : சோனியா | | : |
| Father / Husband Name | : | | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the day of 11/09/2025

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (எதிர்மனுதாரர் தரப்பில்)**

என் கணவரின் சிறிய தங்கையின் பெயர் என்னவென்றால், பானுப்பிரியா ஆகும். அவர் எங்கு வசிக்கிறார் என்றால், தெரியாது. அவருடைய கணவர் வீடு எங்குள்ளது என்றால், அத்திப்பேடு ஆகும். பானுப்பிரியா திருமண நிகழ்ச்சியில் நான் கலந்து கொண்டு எடுத்த புகைப்படத்தை அடையாளம் காட்ட முடியும் என்றால் சரிதான். ரத்னா எனக்கு என்ன உறவு என்றால், எனது அத்தை ஆவார். அவர் சூளூர் பேட்டையில் வசிக்கிறார் என்றால், இல்லை. சத்தியவேடு, மாதர்பாளையத்தில் வசிக்கிறார். நான் அவருடன் தான் சூளூர்பேட்டை மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக செல்வேன் என்றால் சரியல்ல. யாருடன் அந்த மருத்துவமனைக்கு சென்றேன் என்றால், என் அக்கா ரேவதியுடன் சென்றேன். நான் பிரிந்து சென்ற பிறகு என் அம்மா என் கணவருடன் சேர்த்து வைக்க முயன்றார் என்றால் சரிதான். என் அம்மாவிற்கு நான் பிரிந்து செல்வது

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA

விருப்பமில்லை என்றால் சரிதான். திருமணம் என்னுடைய சம்மதத்தை பெற்ற பின்பு தான் நடந்தது என்றால் சரிதான். அதன் பின்பு தான் திருமண ஏற்பாடுகள் செய்தார்கள் என்றால் சரிதான். சூளுர் பேட்டைக்கு நான் செல்லும் போது என் கணவர் என்னுடன் வந்தாரா என்றால், இல்லை. சூளுர் பேட்டை அனுராதா மருத்துமனையில் நான் சிகிச்சை பெற்றேன் என்றால், மருத்துவமனை பெயர் ஞாபகமில்லை. நான் சிகிச்சை பெற்றதற்காக மருத்துவ ஆவணங்கள் தாக்கல் செய்ய இயலுமா என்றால், என் கணவர் வீட்டிலேயே வைத்து விட்டு வந்துவிட்டேன். ஸ்டெட் போர்டு மருத்துமனையில் எனக்கு கர்ப்பப்பை கட்டி உள்ளதாக சொல்லியிருக்கிறார்கள் என்றால், நீர்க்கட்டி என்று தான் சொன்னார்கள்.

இன்றைய தேதி வரை 1ம் எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ தயாராக இருக்கிறார் என்றால், நான் தயாராக இல்லை. குடும்ப நல நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். பலராமன் எனக்கு எந்த உறவு வருகிறார் என்றால், என் பாட்டி கமலம்மாளின் தம்பி ஆவார்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

SHANKARAN MANJULA

Digitally signed by SHANKARAN MANJULA